வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் மலர்விழி

தேதி 24.11.2022 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச்செய்திகள்*

- புதுடெல்லியில் நடைபெறும் அசாம் படைத் தளபதி லச்சித் பார்புக்கானின் 400-ஆவது பிறந்த நாள் விழாவில், நாளை பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.
- நாட்டின் உணவு பாதுகாப்பிற்கும் சர்வேத உறவுகளின் மேம்பாட்டிற்கும் சிறுதானியங்கள் மிக முக்கியம் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.
- புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், காசி தமிழ் சங்கமத்தில் கலந்து கொள்வதற்காக, இன்று வாரணாசி செல்கிறார்.
- ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் வழங்க புதுச்சேரியில் இன்று நடைபெற்ற முகாமில், சுமார் 350 ஓய்வூதியதாரர்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.

*லச்சித்பார்புக்கான்*

அசாம் வரலாற்றில் புகழ் பெற்ற அஹோம் வம்சத்து படைத் தளபதி லச்சித் பார்புக்கானின் 400-ஆம் ஆண்டு பிறந்த நாளை ஒட்டி புதுடெல்லியில் நடைபெறும் 3 நாள் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில், நாளை பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார். மக்களால் அதிகம் அறியப்படாத விடுதலைப் போராட்ட வீரர்களை பிரபலப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, லச்சித் பார்புக்கானின் 400-ஆவது பிறந்த நாளை ஒட்டிய ஓராண்டுக் காலக் கொண்டாட்டங்களை, கடந்த பிப்ரவரி மாதம் குவஹாத்தியில், அப்போதைய குடியரசு தலைவர் திரு ராம் நாத் கோவிந்த் தொடக்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக அசாம் அரசு சார்பில் புதுடெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 3 நாள் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று மாலை கலந்து கொள்கிறார். 1671-ஆம் ஆண்டு சராய்காட் போரில் அவுரங்கசீப்பின் படைகளைத் தோற்கடித்து, முகலாயப் பேரரசின் விரிவாக்கத்தைக்

கட்டுப்படுத்திய அசாமியப் படைகளுக்கு தலைமை ஏற்றவர் லச்சித் பார்புக்கான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*<u>மன்கிபாத்</u>*

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 27-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அகில இந்திய வானொலியின் மன் கி பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார். பிரதமரின் இந்த 95-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய தினம் காலை 11 மணிக்கு, அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் தொலைக் காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். அகில இந்திய வானொலியில் பிரதமரின் ஹிந்தி உரையைத் தொடர்ந்து அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும். மன் கி பாத் பிராந்திய மொழி பெயர்ப்பு, அன்று இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

*<u>சிறுதானியம்</u>*

நாட்டின் உணவு பாதுகாப்பிற்கும் சர்வேத உறவுகளின் மேம்பாட்டடிற்கும் சிறுதானியங்கள் மிக முக்கியம் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார். அடுத்த ஆண்டு சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு புதுடெல்லியில் இன்று நடைபெற்ற முன்னோட்ட நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், கொரோனா, பருவநிலை மாற்றம் மற்றும் பல்வேறு பிணக்குகளின் பின்னணியில் சிறுதானியங்களின் முக்கியத் துவம் இன்னும் அதிகரிப்பதாக கூறினார். பருவநிலை மாற்றத்தால் உணவு தானிய உற்பத்தி குறைந்து வர்த்தகம் பாதிக்கப்படலாம் என்பதையும் சர்வதேச உறவுகளில் உணவு பாதுகாப்பிற்கு முக்கிய இடம் இருப்பதையும், அவர் சுட்டிக் காட்டி, இத்தகைய நிலைமைகளை சமாளிக்க சிறுதானியங்கள் பெருமளவில் உதவ முடியும் என்றார்.

மத்திய வேளாண் அமைச்சர் திரு நரேந்திர சிங் தோமர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் சிறு தானியங்களின் முக்கியத் துவம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு உதவிகரமாக இருக்கும் என்றார். சிறுதானியங்களின் உற்பத்தியில் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதையும், வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய தன்மை சிறுதானியப் பயிர்களுக்கு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். இந்தியாவில் சிறுதானியங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அதிகரிக்க, அமைச்சகம், இயக்க ரீதியில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். சிறுதானிய

ஆண்டு பற்றிய இந்த முன்னோட்ட நிகழ்ச்சியில், இந்தியாவிற்கான 64 நாடுகளின் தூதர்களும் கலந்து கொண்டனர்.

கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, திணை போன்ற சிறுதானியங்களில், அரிசி. கோதுமை போன்ற வழக்கமான தானியங்களை விட அதிக அளவில் புரதசத்து, நார்ச்சத்து மற்றும் இதர ஊட்டச் சத்துக்கள் இருப்பதும், ரத்த சோகை, கல்லீரல் கோளாறுகள், மற்றும் ஆஸ்துமா உள்ளிட்ட பல நோய்களை, சிறுதானியங்களால் கட்டுப்படுத்த இயலும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*குஜராத்*

குஜராத்தில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு, சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று 2-ஆவது நாளாகவும், குஜராத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். குஜராத்தில் அடுத்த 25 ஆண்டுகளுக்கான வளர்ச்சியை தீர்மானிப்பதாக நடப்பு தேர்தல் அமையும் என்று, பாலன்பூரில் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் கூறினார். தொடர்ந்து மோடாசா நகரில் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசுகையில் பழங்குடி மக்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று குஜராத்தில், தாஹேகாம், பாவ்லா உள்ளிட்ட இடங்களிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்கிடையே, ஆம் ஆத்மி கட்சியின் சார்பில் பஞ்சாப் முதலமைச்சர் திரு பகவந்த் மான், காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் திரு ஆலோக் சர்மா ஆகியோரும், குஜராத்தில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

*தமிழிசை-காசி*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், மத்திய கல்வியமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் விடுத்த அழைப்பின் பேரில் காசி தமிழ் சங்கமத்தில் கலந்து கொள்வதற்காக இன்று வாரணாசி செல்கிறார். நாளை முழுவதும் அவர் வாரணாசியில் தங்கி இருந்து தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு தலைமை ஏற்கிறார்.

ஓய்வூதியம்

மத்திய அரசின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலத் துறையும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து, ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் வழங்கும் முகாமை இன்று புதுச்சேரியில் நடத்தின. ஜிப்மர் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் இம்முகாமை தொடக்கி வைத்தார். முகம் அடையாளம் காணும் தொழில் நுட்பம் மூலமாக வீட்டிலேயே ஆயுள் சான்றிதழ் பெற்றுக் கொள்வது, ஓய்வூதியதாரர்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதம் என்று அவர் கூறினார். ஜிப்மர் ஓய்வூதியதாரர்கள் சங்கத்தின் தலைவர் திரு நடராஜன் வாழ்த்துரை வழங்கினார். ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் திருமதி ராமன்ஜீத் கவுர், திரு மஞ்சு குப்தா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், பாரத ஸ்டேட் வங்கியின் உதவி பொது மேலாளர்கள் திரு சதீஷ் பாபு, திரு நடராஜன், திரு சரவணன் மற்றும் எஸ்பிஐ முதன்மைக் கிளை முதன்மை மேலாளர் திரு சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். 83 வயதான திரு நாராயணசாமி, 82 வயதான லெப்டினென்ட் கர்னல் விஜயராகவன் ஆகிய 2 மூத்த ஓய்வூதியதாரர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கப்பட்டது. ஆதார் அட்டையில் திருத்தம் செய்து கொள்ளும் தேவை உள்ள ஓய்வூதியதாரர்களுக்கு, அதற்கான சிறப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இருந்தன. இம்முகாமில் சுமார் 350 ஓய்வூதியதாரர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

தணிக்கைநாள்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான முதன்மை கணக்கு தணிக்கையாளர் அலுவலகம் சார்பில், தணிக்கை நாள் சிறப்பு நிகழ்ச்சிகள் புதுச்சேரியில் இன்று நடைபெற்றன. இன்று காலை கடற்கரை சாலை காந்தி சிலையில் இருந்து தணிக்கை விழிப்புணர்வு நடை பயணம் நடைபெற்றது. பின்னர் தனியார் ஓட்டலில் தணிக்கை முறை குறித்துகுழு விவாதம் நடைபெற்றது. முதலமைச்சர் திரு ரங்கசாமி, இந்த விவாத நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். எந்த ஒரு கணக்குப் பதிவிற்கும் தணிக்கை மிக அவசியம் என்றும், தணிக்கை செய்வதால் உண்மை மதிப்பும் நம்பகத்தன்மையும் அதிகரிக்கும் என்றும் அவர் தமது உரையில் கூறினார். தணிக்கையாளர்கள் குற்றம் கண்டுபிடிப்பவர்களாக மட்டும் அல்லாமல் வழிகாட்டுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். மாநில தலைமை கணக்காயர் திரு ஆனந்த் இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றினார். சபாநாயகர் திரு ஆர் செல்வம், பொது கணக்கு குழுத்

தலைவர் திரு ரமேஷ், காவல்துறை தலைவர் திரு மனோஜ்குமார் லால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*நிர்மலா*

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில், சேவை மற்றும் வர்த்தகத் துறை நிபுணர்களைச் சந்தித்து, பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை மேற்கொண்டார். நிதித் துறை இணை அமைச்சர்கள் திரு பங்கஜ் சவுத்ரி, டாக்டர் பகவத் கராட், நிதித் துறை செயலர் டாக்டர் டிவி சோமநாதன் உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

*நிலக்கரி*

இவ்வாண்டு டிசம்பர் மாதம் வரை இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தி 448 மில்லியன் டன்னாக பதிவாகி உள்ளது. இது கடந்த ஆண்டு இதே கால கட்டத்தைக் காட்டிலும் 18 சதவிகிதம் அதிகமாகும் என்று மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. நிலக்கரி அடிப்படையிலான உள்நாட்டு மின் உற்பத்தி நிலையங்களில் நிலக்கரி கையிருப்பை, வரும் நவம்பர் மாதத்திற்குள் 30 மில்லியன் டன்னாகவும், அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் 45 மில்லியன் டன்னாகவும் உயர்த்தவும் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

*பயிர்க்காப்பீடு*

விவசாயிகளுக்கான பிரதமரின் பயிர்க் காப்பீடு திட்டத்தில், பருவநிலை மாற்றம் மற்றும் விரைவான தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப விவசாயிகளுக்கு உகந்த மாற்றங்களை கொண்டு வருவதில் திறந்த மனதுடன் இருப்பதாக மத்திய அரசு கூறி உள்ளது. 2016-ஆம் ஆண்டு முதலே இத்தகைய மாற்றங்களை அரசு அமல்படுத்தி இருப்பதாகவும், பயிர் இழப்பு குறித்து விவசாயிகள் தகவல் கொடுப்பதற்கான அவகாசம், 48-ல் இருந்து 72 மணி நேரமாக உயர்த்தப்பட்டதே இதற்கு சான்றாகும் என்று மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறைச் செயலர் திரு மனோஜ் அகுஜா செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். விவசாயிகளுக்கான பிரதமரின் பயிர்க் காப்பீடு திட்டம், பயனாளிகளின் எண்ணிக்கையை பொறுத்த வரை உலகின் முதல் இடத்திலும், பிரிமியம் வசூலைப் பொறுத்தவரை 3-ஆவது இடத்திலும் இருந்து வருகிறது.

## கிரிக்கெட்

இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையிலான, முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி, ஆக்லாந்தில் நாளை நடைபெற உள்ளது. அண்மையில் இரு அணிகளுக்கும் இடையிலான 20 ஓவர் போட்டித் தொடரை கைப்பற்றிய உற்சாகத்துடன் இந்திய அணி நாளைய போட்டியில் பங்கேற்கிறது. இந்தியா-நியுசிலாந்து அணிக்கு இடையிலான இரண்டாவது 1-நாள் கிரிக்கெட் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமையும், 3-ஆவது போட்டி, வரும் புதன்கிழமையும் நடைபெறும்.

## ஜம்மு-காஷ்மீர்

ஜம்மு-காஷ்மீரில் சம்பா மாவட்டம் சன்னி மன்ஹாசம் கிராமத்தில் உள்ள வயல்வெளி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான மூட்டை கிடப்பதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து போலீசார் அந்த இடத்திற்கு விரைந்து சென்று, ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பணம் அடங்கிய சிறு மூட்டையைக் கைப்பற்றி உள்ளனர். தீவிரவாத செயல்களை நிறைவேற்றுவதற்காக பாகிஸ்தானில் இருந்து டிரோன் மூலம் இந்த மூட்டை போடப்பட்டிருக்கலாம் என்றும் சம்பந்தப்பட்ட பகுதியில் டிரோன் நடமாட்டம் காணப்பட்டதே இதற்கு சான்றாகும் என்றும், ஜம்மு-காஷ்மீர் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வேறு எங்காவது இதே போல மூட்டை போடப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய, போலீசார் அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.